RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22236

OPEN ACCESS

# சைவ சமயமும் அதன் உட்பிரிவுகளும்

இரா. அ. அனிதா [அ, *]

[அ] தமிழ்த்துறை, டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்-637002, தமிழ்நாடு, இந்தியா

# Saivism and its Subdivisions

R. A. Anitha [a, *]

[a] Department of Tamil, Trinity College for Women, Namakkal-637002, Tamil Nadu, India

* Corresponding Author: animahiaadhi@gmail.com

Received: 27.09.2022
Revised: 29-10-2022
Accepted: 04-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Religion is essential in people's lives from ancient times to today. Each religion has its own characteristics, activities, habits and norms of life. When the Tamil people lived without intermingling with the foreign people, they worshipped the dead people, snakes and lingam. The people of Kurinchi land worshiped Murugan, the people of Mullai land worshiped Maayon, the people of Maruda land worshiped Vaenda (Indra), the people of Neytal land worshiped Varuna, and the people of desert land worshiped Kotravai (Kali). Over a period of time people understood that NC-22-47.

**Keywords:** Worship, Saivism, Maayon, Marudam Land,

## முன்னுரை

சமயம் என்பது பண்டைக்காலந்தொட்டு இன்று வரையிலும் மக்களின் வாழ்வில் இன்றியமையாததாக இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் அச்சமயம் சார்ந்துள்ள மக்களின் செயல்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் கட்டமைக்கும் பண்பு கொண்டதாய் உள்ளது.

தமிழர் பிறமொழி மக்களுடன் கலப்பின்றி வாழ்ந்த காலத்தில் இறந்தவர் வழிபாட்டையும், பாம்பு வணக்கத்தையும், இலிங்க வணக்கத்தையும் கொண்டிருந்தனர். குறிஞ்சிநில மக்கள் முருகனையும், முல்லைநில மக்கள் மாயோனையும், மருதநில மக்கள் வேந்தனையும் (இந்திரானையும்), நெய்தல்நில மக்கள் வருணனையும், பாலைநில மக்கள் கொற்றவையை (காளியை)யும் வழிபட்டு வந்தனர்.

படிப்படியாக அறிவு வளர வளர இத்தெய்வங்கட்கெல்லாம் மேலான பரம்பொருள் ஒன்று உண்டு என்ற நம்பிக்கை பழந்தமிழர்களுக்கு ஏற்பட்டது. அப்பரம்பொருள் எங்கும் எதிலும் தங்கியிருக்கின்றது என்ற பொருளில் அதனை இறை என்றழைத்தனர். மேலும் அப்பரம்பொருள் எல்லாவற்றையும் கடந்து நிற்கிறது என்னும் பொருளில் அதனைக் கடவுள் என்றும் அழைத்தனர். இறை, கடவுள் எனும் இவ்விரு சொற்களும் முழுமுதற் பொருளைக் குறிக்கும் தூய தமிழ்ச் சொற்களாகும்.

தொல்காப்பியமும் தெய்வத்தை இறைவனைக் குறிக்க 'கடவுள்' என்ற சொல்லைக் குறிப்பிடுகிறது. இதனை,

"காமப் பகுதி கடவுளும் வரையார்" (Thamizhannal, 2010)

"கடவுள் வாழத்தொடு கண்ணிய வருமே" (Thamizhannal, 2010)

எனவரும் நூற்பாக்களைக் கொண்டு அறியலாம். மேலும் சங்க இலக்கியங்களிலும் 'கடவுள்' என்ற சொல்லே பரவலாகக் காணப்படுகிறது. இதனை,

"குன்றக் குறவன் கடவுட் பேணி" (Avvai Duraisamy Pillai, 1957)

எனும் ஐங்குறுநூறு பாடல் மூலமும்,

"கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்" (Avvai Duraisamy Pillai, 1968)

"கடவுட் சான்ற கற்பிற் சேயிழை

ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம்" (Avvai Duraisamy Pillai, 1968)

எனவரும் புறநானூற்றுப் பாடல்கள் மூலமும் அறியமுடிகிறது. ஆகவே பண்டைக்காலத்தே இறைபொருளைக் குறிக்க 'கடவுள்' எனும் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம். இக்கடவுள் மீது நம்பிக்கை கொண்டு வாழும் மக்கள் தங்களுக்கு விருப்பமான கடவுளை வணங்கும் முறையை முறைப்படி அறிந்து அக்கடவுளை வழிபடவும் ஆரம்பித்தனர். அவ்வாறு ஒருசாரார் தங்களுக்கு விருப்பமான சைவசமயத்தைப் போற்றி வழிபடத்தொடங்கினர்.

## சைவ சமயம்

சைவம் என்பது புலால் உண்ணாமை என்னும் பொதுவான பொருளைத் தந்தாலும் அது ஒரு மதப்பிரிவிற்கும் பொருந்தும். சைவம் என்பது எவ்வுயிர்க்கும் அன்பு செலுத்துதல் என விளக்கம் அளிக்கப்படுகிறது. தமிழர்களின் ஆதி சமயமாக சைவம் கருதப்படுகிறது. இச்சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாக சிவபெருமான் கருதப்படுகிறார். சிவன் என்ற பெயர் தொல்காப்பியர் காலத்தில் வழங்கப்படவில்லை. ஆயினும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே சிவ வழிபாடு இருந்துள்ளமைக்குச் சான்றுகள் உள்ளன.

சிவ என்னும் சொல்லுக்குச் "செம்மை, இன்பம், நலம், மங்களம்" என்ற பொருள் உண்டு. கடவுளைச் செம்பொருள் என்றழைப்பது தமிழர் மதம். சிவந்த மேனியுடையவராக சிவன் போற்றப்படுகிறார். ஆகவே சொல்லாராய்ச்சியின் முடிவின் படி சிவனைத் தமிழ்க் கடவுள் என்று கூறலாம்.

சைவத்தில் பெண்ணுக்கு முக்கியத்துவம் உண்டு. இது தாய்த் தெய்வ வழிபாட்டின் கூறுகளைக் கொண்டுள்ளது. ஆகவே பழங்கற்காலத் தமிழன் பரம்பொருளைத் தாயாகக் கொண்டு வழிபட்டிருக்கிறான் என்பதை அறியலாம். புதுக்கற்காலத் தமிழர்களிடையே இலிங்க வழிபாடு இடம் பெற்றிருக்கிறது. "இந்த இலிங்க வழிபாடு பற்றி ஆராய்ந்த ஆரியர்கள் இவ்வழிபாடு தமிழர்களுக்கே உரியதெனத் தெரிவித்துள்ளனர். ஆசிரியர்களின் இருக்கு (ரிக்) வேதத்தில் பழம்பகுதியில் இந்திரனையே ஆரியர்கள் தங்கள் கடவுள் எனக் கொண்டனர்." (Gurusamy, 2009) இலிங்க வழிபாடுகளை அழிக்க உதவுபவனாக இந்திரன் அங்கே பேசப்படுகிறான்.

இவ்வாறு பழந்தமிழர்களின் முழுமுதற்கடவுளாக, எல்லாம் வல்ல பரம்பொருளாகக் கருதப்பட்டு வந்த சிவனைக் குறிக்கும் இலிங்க வழிபாட்டினைப் பழித்தும் இழிவாகப் பேசியும் ஒதுக்கியும் வைத்த ஆரியர்களின் செல்வாக்கானது சங்ககாலத்தில் மங்கியே இருந்தன. இக்காலக் கட்டத்திலேயே சமணர், பௌத்தர் தமிழகம் புகுந்து, சங்கம் மருவிய காலத்தில் குறிப்பாக பல்லவர் காலத்தில் அதிக செல்வாக்குப் பெற்று இருந்தனர். இத்தகைய புறச்சமயத்தவர்களின் செல்வாக்கை ஒழிக்கவும் ஆடிப்பாடி வணங்கும் பக்தி நெறியினை (வைதீக நெறியினை) தமிழகத்தில் நிலைநாட்டுவதற்கும் எந்த பழந்தமிழர்களின் சிவ இலிங்க வழிபாட்டை ஆரியர்கள் எதிர்த்தார்களோ அதே இலிங்க வழிபாட்டை பிற்காலத்தில் அதர்வண வேதத்தில் ஏற்றுக் கொண்டு பழந்தமிழர்களின் சிவநெறியிலும் மால்நெறியிலும் தங்களை இணைத்துக் கொண்டு 'வைதீகச் சைவநெறி' எனவும், 'வைதீக வைணவநெறி' எனவும் மாறினர்.

இதனால் கி. பி ஆறாம் நூற்றாண்டில் சைவமும் வைணவமும் இணைந்து இந்து சமயம் என்றானது. ஆகவே, ஆரியர்கள் பண்டைத் தமிழர்களின் இலிங்க வழிபாட்டை முற்காலத்தில் ஏற்காது இருந்தமையினால், இலிங்க வழிபாட்டிற்குரிய சிவன் ஆரியக்கடவுளன்று, தமிழ்க்கடவுளே என்றும் கருதப்படுகிறது. இக்காலத்திலேயே வைதீக இந்து சமயம், சமணசமயம், பௌத்த சமயம் ஆகிய மூன்று சமயங்களிடையே கடும் மோதல் ஏற்பட்டு மாபெரும் பக்தி இயக்கம் உண்டானது.

ஆரியர்களின் வருகையினால் பழந்தமிழர்களின் முருகன் சுப்ரமணியனாகவும், மாயோன் விஷ்ணு, திருமாலாகவும், சிவன் உருத்திரனாகவும், கொற்றவை பார்வதி, துர்க்கையாகவும் மாறினர். இருக்கு(ரிக்) வேதத்துக்குப் பின் ஆரியர்களால் (பிராமணர்கள், அந்தணர்கள்) ஏற்றுக் கொள்ளப்பட்ட சிவன் (அல்லது) உருத்திரன் அழித்தல் தொழிலுக்குரிய கடவுளாகவே இருந்தார்.

சிவலிங்க வழிபாடு ஆரியர் வருகைக்கு முன்பே தமிழகம் மட்டுமின்றி இந்தியாவெங்கும் இருந்துள்ளது என அறிஞர் பலர் கருதுகின்றனர். “சிந்து சமவெளி நாகரீக காலத்தில் சிவ வழிபாடு இருந்துள்ளது. சிந்து சமவெளி அகழ்வாய்வில் சிறிய, பெரிய சிவலிங்கங்களும் மூன்று முகம் கொண்ட உருவம் ஒன்றும் கிடைத்துள்ளன. தலையில் எருமைக் கொம்பு உண்டு. இது சிவபெருமானின் உருவமாக இருக்கலாம் என்று ஊகிக்கின்றனர். இங்கே கிடைத்த முத்திரைகளில் காளை உருவம் உள்ளவையும் இருக்கின்றன. ஒரு காலைத் தூக்கி நடனமாடும் உருவமும் கிடைத்துள்ளது. இந்தச் சான்றுகளின் அடிப்படையில் சிந்து வெளி நாகரீக மக்கள் சிவனை வழிபட்டனர் எனக் கொண்டு இதனை திராவிடநாகரீகம் என்றும் ஆரிய நாகரீக காலத்திற்கு முற்பட்டது என்றும் மார்ஷல், ஈராஸ் பாதிரியார் போன்றோர் கருதுகின்றனர். இந்தக் கருதுக்களின்படி தமிழர்களின் ஆதிகால மதம், சைவமே” என மறைமலையடிகள், விபுலானந்தர் முதலானோர் கூறுகின்றனர் (Perumal, 2014).

இவ்வாறு இலிங்க வடிவமாகக் கருதப்பட்டு வந்த சிவன் சங்கப் பாடல்களில் ஆண் ஏற்றைக் கொடியாக உடையவன், நீலமணிமிடற்றன் (புறம் 91, பரி-9, புற-56), நுதல்விழி நாட்டத்து இறைவன் (புறம்-55), முக்கட்செல்வன் ((முருகு 153, அகநா -181), நெடிய முதல்வன், ஆலமர் செல்வன் (புறம் -6), உமையொருபாகன், முதுமுதல்வன் (புறம் -106), ஆலமர் கடவுள் (புறம் - 198) என்றெல்லாம் குறிக்கப்படுகிறான். மேலும் சிலம்பில் ‘பிறவா யாக்கைப் பெரியோன்’ (சிலம்பு - இந்திரவிழவூரெடுத்த காதை -169) என சிவன் பிறப்பு, இறப்பு அறியாத பரம்பொருள் தன்மையை உடையவன் எனக் குறிக்கப்படுகிறான். ஆகவே பண்டைத் தமிழர்களின் பழம்பெரும் தெய்வமான சிவபெருமானைக் குறிக்கும் ‘சிவன்’ எனும் சொல் சங்க காலத்திலும், அதற்கு முன்பும் இல்லை. எனினும் அச்சிவனைப் பற்றிய குறிப்பும், தொன்மையும் பரவலாக விரவிக் கிடக்கின்றன எனலாம்.

பழங்காலத்தில் சிவபெருமானை வணங்கியவர்கள் உருவம் இல்லாத ஓர் அடையாளத்தையே வைத்து வணங்கினார்கள். உருவம் இல்லாத அந்த அடையாளத்திற்குப் பெயர் ‘இலிங்கம்’ என்பதாகும். சிவ லிங்கத்திற்குத் தமிழர் வழங்கிய பெயர் ‘கந்தழி’ என்பது ஆகும். லிங்கம் என்னும் பெயர் பிற்காலத்தில் வழங்கத் தொடங்கிய பிறகு பழைய கந்தழி என்னும் பெயர் மறைந்து விட்டது. எனவே கந்தழியாகிய சிவலிங்க வழிபாடு மிகத் தொன்மையானது ஆகும். இது போல “அருவுருவமான (உருவம் இல்லாத) இறைபொருக்கு உடல் உறுப்பு கொடுத்து உருவக் கடவுளாகக் கொண்டாலும் அவ்வுருவம் அருவுருமேதான் என்கிறார் சுவாமி பாஸ்கரானந்தர். இவர் அருவுருவக் கடவுளுக்கு இடம், காலம், குணம் ஆகிய போர்வையைச் சுற்றினால் உருவக் கடவுளாக உணர முடியும்” என்கிறார்.

சிவன் உருவம், அருவுருவம் இவற்றைக் கடந்த ஒரு மேலான பரம்பொருளாக இருந்துள்ளார் என அறியலாம். இவ்வாறு “எல்லாப் பொருள்களையும் கடந்த நிலையிலும் எல்லாப் பொருட்களிலும் ஊடுருவியும் நிற்கும் பரம்பொருளையே சிவன் எனக் கூறினாலும், அப்பரம்பொருள் நம்மோடு தொடர்பு கொள்ள எடுத்துக்கொண்ட திருக்கோலமும் அத்திருக் கோலத்தைக் குறிக்கும் திருநாமமும் இங்குப் பரம்பொருளைச் ‘சிவன்’ எனக் குறித்தற்கு காரணமாகும். இத்திருக்கோலத்தின் வாயிலாகவும் இத்திருநாமத்தின் வாயிலாகவும் பரம்பொருளோடு தொடர்பு கொண்டு வாழ்தலே ‘சைவம்’ எனப்படுகிறது” என அறியமுடிகிறது.

இத்தகு சைவ சமயமானது பாசுபதம், காபாலிகம், மாவிரதம், வாமம், காளாமுகம், வைரவம் எனப் பல உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதுபோல் ஒவ்வொரு சமயமும் வழிபட்டு வரும் மக்களின்

கருத்து வேறுபாட்டுக்கு உட்படுத்தப்பட்டு பல பிரிவுகளாகப் பிரிந்து காணப்படுகிறது. இதனைத்தான் கா. பெ சந்திரசேகரன் என்பவர "பக்திமை காரணமாகத் தாம் ஏற்றுக்கொண்ட இறைவனை வழிபடும் ஒருகலாறுகள் - நியதிகள் சமயநெறிகளாக விளங்குகின்றன. இந்நெறிகள் கால வர்த்தமானங்களுக்கேற்பவும் கருத்து வேறுபாடுகள் காரணமாகவும் வழிபட்டு வரும் ஒரு பரம்பொருளுக்குரிய சமயமே கிளைச்சமயங்களாகவும் சமயப்பிரிவுகளாகவும் விளங்குகின்றன" என்கிறார்.

## சைவ சமயப் பிரிவுகள்

### சாக்தம்

"காளியை (சக்தியை) முழு முதற் கடவுளாக வழிபடும் பிரிவினர் சாக்தர் எனப்படுவர். இவர்கள் சைவத்திலிருந்து பிரிந்து தனி வழிபாட்டுப் பிரிவினராய் மாறினர். இவர்கள் தனிப் பிரிவினராய் மாறியது முற்காலப் பல்லவர் காலத்திலாகும். இவர்கள் மந்திரம், யந்திரம், முத்திரை, சக்கரம் ஆகியன முக்தியடைய வழிகாட்டுவன என்பர். பண்டைத் தமிழ் சைவத்திலிருந்து, வைதீக சமயத்தவரின் இணைப்பினால் ஏற்பட்ட தாக்கம் 'இச்சாக்தம்' ஆகும்." (Perumal, 2014) இந்து சமயத்தின் முப்பெரும் பிரிவுகளுள் ஒன்றாய் இருந்துள்ளது. இதனை, "இந்து சமயத்தின் முப்பெரும் பிரிவுகளான சைவம், சாக்தம், வைஷ்ணவம் ஆகிய பிரிவுகளைத் தாங்கி நிற்கும் நூல்கள் ஆகமங்கள் எனப்படும். சைவர்கள் 28 ஆகமங்களை ஏற்றுக் கொண்டுள்ளனர். சாக்தம் தாந்திரிக நூல்களை 27 எனக் கொண்டுள்ளது" என்கிறார்கள் செ. இராசாமணி, அ. கங்காதரன் (Perumal, 2014).

"இந்துக்களின் பிரிவுகளான சைவம், வைணம் ஆகியவற்றின் புனித நூல்களில் தாவர உணவே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மீன், மாமிசம் மற்றும் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மதுபானம் ஆகியவற்றை உண்ண சாக்தர்களின் மதநூல் அனுமதிக்கிறது. இதனால் சில இந்துக்கள் தங்கள் மதத்தைச் சார்ந்த வேறு பிரிவினர்கள் மாமிச உணவை உண்பதை வெறுக்கிறார்கள்."

இவ்வாறு புலால் உணவை உண்டும், சைவ வைணர்களின் வெறுப்புக்கு ஆளாகியும் இருப்பவர்கள் சாக்த சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர் எனலாம். ஆரம்பகால பல்லவர் காலத்தில் முப்பெரும் இந்து சமயங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டு வந்த 'சாக்தம்' பிற்கால பல்லவர் காலத்தில் ஆதிசங்கரரின் காலத்தே அறுசமய (ஷன் மதம்) கொள்கைக்குட்பட்ட இந்து சமயத்தின் உட்பிரிவுகளாகக் கருதப்பட்டது.

"ஆதிசங்கரர் தம் காலத்தே இருந்த காணகதீயம் (கணபதி வழிபாடு), கௌமாரம் (ஐந்திரம் எனும் குமரன் வழிபாடு), ஆக்னேயம் (சௌரம் எனும் சூரியன் வழிபாடு), சாக்தம் (சக்தி வழிபாடு), சைவம் (சிவன் வழிபாடு), வைணவம் (திருமால் வழிபாடு) எனும் ஆறு சமயங்களையும் ஒன்றுபடுத்தினார். அது காரணமாக அவர் ஷன்மதஸ்தாபகர் எனப்பட்டார்."

அவர் காலத்தில் இந்து மதமொன்றே என இந்தியா முழுவதிலும் செல்வாக்குப் பெற்றிருந்ததால் அதன் உட்பிரிவுகளை ஒன்றுபடுத்துவதையே தேசிய ஒருமைப்பாட்டுப் பணியாக அவர் கருதியிருக்கக் கூடும் எனலாம்.

சாக்த மரபினர் காளிக்குத் தங்கள் சிரங்களையே அரிந்து கொடுத்து வழிபாடு செய்வர். "இத்தகைய சுயபலி கொடுக்கும் அடியவர்களை 'மந்தரசாதகர்கள்' என்றும் 'யாமள சாத்திரத்தைப் பின்பற்றுபவர்கள என்றும் கூறுவர்."

இவர்கள் தங்களது தலையை அரிந்து கொண்ட பிறகு தங்களது குண்டலினி சக்தியால் மீண்டும் உயிர்பெறுவர். இவ்வாறு காளியின் (சக்தியின்) முன் தங்களது தலையை அறிந்து காணிக்கையிடும் பழக்கமானது பண்டைத் தமிழர்களின் கொற்றவை வழிபாட்டோடு தொடர்புடையதாக இருப்பதனால், சாக்தம் சமயமானது பண்டைத் தமிழ் கொற்றவை வழிபாட்டோடு தொடர்பு உடையதாய் இருந்திருக்கலாம் எனவும், வடவர்களின் (ஆரியர்களின்) கலப்பினால் இவ்வழிபாடு பண்டைத் தமிழ் சமயத்திலிருந்து பிரிந்து தனி சமயமாக உருவாகியிருக்கலாம் எனவும் கருத வாய்ப்புண்டு. இவ்வாறு

பண்டைத் தமிழ் சமயத்திலிருந்து பிரிந்து சென்றதன் காரணமாகத்தான் சாக்தம் அறுசமயங்களுள் ஒன்றாகியதான இடத்தைப் பெற்றிருக்கிறது எனவும் கருத வாய்ப்பளிக்கிறது. மேலும், "வடநாட்டிலிருந்து வந்து தமிழ்ச் சைவத்தில் புகுந்ததாகக் கருதப்படும் காபாலிகம், காளாமுகம், பாசுபதம், வைரவம், வாமம், மாவிரதம்" எனும் அகப்புறச் சமயங்களுள் 'சாக்தம்' இடம்பெறவில்லை.

ஆகையால் சாக்தம் இவ்வடசைவப் பிரிவுகள் தமிழகம் வருவதற்கு முன்னே பண்டைய கொற்றவை தெய்வ வழிபாட்டிலிருந்து தனியே பிரிந்திருந்தது எனலாம்.

பிற்காலப் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் வட நாட்டிலிருந்து வந்த சைவத்தின் உட்பிரிகள் வழக்கில் இருந்தன. அவ்வாறு வழக்கில் இருந்த வடசைவ சமயப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் பல்லவர் காலத்தில் காஞ்சியில் இருந்தனர் என்பதனை,

"விரிசடை விரதிகள் அந்தணர் சைவர் பாசுபதர் காபாலிகள்

தெருவினிற் பொலியும் திருவாரூர் அம்மானே"

என அப்பர் குறிப்பிடுகிறார். அதன்படி பாசுபதர், காபாலிகர், காளாமுகர் போன்றோர் தமிழகத்தில் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

## பாசுபதம்

பாசுபதம் என்ற பிரிவினர் உடலில் களிமண்ணையும் சாம்பலையும் பூசுவர். இவர்களது பழக்கவழக்கங்களும் நம்பிக்கையும் விசித்திரமானவையாக இருந்துள்ளது. இவர்கள் 'மயேச்சுரர்' எனவும் அழைக்கப்பட்டனர். சிவனே முழுமுதற் கடவுள் என்றனர். லிங்கத்தை அல்லது சிவ மூர்த்தத்தை வணங்குவர். இவர்களுள் சிலர் தலைமுடியைக் கத்தரித்து விடுவர் சிலர் மொட்டையடித்துக் கொள்வர் சிலர் குடுமி வைத்திருப்பர். இவர்கள் அனைவரும் உலகப் பற்றை விட்டு மேனிலை பெறத் தவமுயற்சி மேற்கொண்டிருந்தனர். இவர்களுள் சிலர் சிவ கணங்கள் மீது நம்பிக்கை வைத்தனர். எனவே அவற்றை உளம் குளிரச் செய்ய மக்களைப் பலியிடல், இறந்தவர் உடலைப் படைத்தல் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்தனர். இவர்களைப் போலவே காபாலிகர்களும் பைரவருக்கும், காளிக்கும் தம் உயிரைப்பலியிட்டு வந்தனர். ஆயின் பாசுபதர், காபாலிகர் போன்றார் பைரவரை வணங்குதல் அனுசமயத்தில் இடம் பெறாமை பிற்காலத்தே வட இந்தியாவிலிருந்து வந்தமை போன்ற காரணங்களால் சாக்தரிலிருந்து வேறுபடுகின்றனர் எனலாம்.

## காளாமுகர்

"காளாமுகப் பிரிவைத் தோற்றுவித்தவர் 'இலகுலீசர்' என்னும் குசராத்திய பார்ப்பனராவார். காபாலிகம் வேத மறுப்புக் கோட்பாடான உலகாய்தத்தோடு ஒருவகையில் உறவு கொண்டதால் அதனை நாத்திகச் சமயங்களுள் ஒன்றாக வேதியர் கருதினர். அந்தக் குறையைப் போக்கவே சிவ வழிபாட்டை வைதீக நெறிக்குள் அடக்கும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதுவே காளாமுகமாக வடிவு கொண்டது." இவர்கள் சிறந்த கல்வி பெற்று பக்தி நெறியைப் போற்றினர். மெய்மறந்து ஆடிப்பாடி இறைவனை வழிபட்டதோடு மந்திரங்களிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

## மாவிரதிகள்

நெற்றியில் மூன்று கீற்று விபூதி அணிவர். உடல் முழுக்க சாம்பல் பூசியிருப்பர். தலை மயிர் உச்சியில் எலும்பு மணிதாழ்வடம் மாலையாகக் கட்டியிருப்பர். முன் கையில் எலும்பு கோத்த கயிறு கட்டப்பட்டிருக்கும். கறுப்பு மயிர் பூணூலும் யோகப் பட்டமும் உண்டு. கோவணம் மட்டுமே அணிந்தவர் மண்டையோட்டில் பிச்சை வாங்குவர் சுடுகாட்டுக்குச் சென்று சாம்பலைப் பூசுபவர்கள்.

## காபாலிகர்

இவர்கள் மாவிரதியருடன் கொள்கைத் தொடர்புடையவர்கள். தமிழகத்தில் காபாலிகம் பரவலாகக் காணப்படுகிறது. இச்சமய பிரிவினரில் 'ஒன்று' வைரவம். இவ்வைரவரும் காபாலிகரும் ஒன்றிணைந்து செயல்பட்டுள்ளனர். சிவனை பைரவனாக வைத்து வழிபட்டு வந்த காபாலிகர்கள் மண்டை ஓடுகளையே மாலையாக அணிந்திருந்தனர். மாண்ட உயிர் உள்ளிட்ட எல்லா உயிர்களையும் பலியிட்டனர். நன்றாகக் குடித்துவிட்டு அவற்றின் மாமிசத்தைத் (ஊனைத்) தின்று வந்த அவர்கள் அச்சமூட்டும் தோற்றம் உடையவராவர். மந்திரதந்திரங்களில் வல்ல இவர்கள் சிவனை வழிபடுகையில் மெய்மறந்து ஆடினர். இக்காபாலிகர்கள் பெண்களை ஆதிசக்தி எனச் சொல்லி சக்தி வழிபாட்டை மேற்கொண்டனர். "காபாலிகர்களிடமிருந்த சமய மேலாண்மை பின்னர் காளாமுகர்களால் கைப்பற்றப்பட்டது என வசுந்துரா பிலியோசா கூறுவதால் காபாலிகம் மிகவும் தொன்மையானது" என்பர் இரா. சக்குபாய்.

இவர்கள் "மண்டையோட்டில் பிச்சை எடுப்பது வழக்கம். இவர்கள் காஞ்சி ஏகாம்பரர் கோவிலில் கூட்டம் கூட்டமாகத் தங்கி இருந்தனர். ஆருக சமணர்கள் மணம் புரியா வாழ்வைச் சுட்டிக் காட்டி காபாலிகர்கள் என்று இவர்களை எள்ளி நகையாடினர். புத்த பிக்குகள் தலையை மழித்து விட வேண்டும் என்ற பௌத்த சடங்கினை எண்ணி நகையாடிய காபாலிகர்களும் பல்லவர் காலத்தில் இருந்தனர்" என்பர் க. இராசமாணிக்கம்.

காபாலிகம் உலகாய்தத்தைப் போலவே பஞ்சபூதம் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டிருந்தது. அதனாலேயே வேதியர்களால் காபாலிகம் நாத்திகக் கோட்பாடுகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது என்பது உறுதி. வேதியர் பார்வையில் 'நாத்திகம்' என்ற சொல் கடவுள் மறுப்பைக் குறிப்பது ஆகாது, வேத மறுப்பைக் குறித்தலே நாத்திகம் ஆகும்.

சைவம் தழைக்க தொண்டாற்றிய 63 நாயன்மார்களுள் ஒருவரான அப்பர் சமணம் சார்ந்தார். "அப்பர் சார்ந்த சமண சமயம் திகம்பர சமணம். இத்திகம்பர சமணப் பிரிவானது சாதி அமணர் (அருகர்) வழிபாட்டை உடையது. பின் தன் தமக்கையின் முயற்சியால் சமணத்திலிருந்த அப்பர், சைவ சமயத்தின் உப்பிரிவான காபாலிகத்தை சேர்ந்தார். இதனை,

"மாயாவிக் கடையமணர் வாகீசத் திருவடியாம்

காபாலி அடியவர்பால் கடக்களிற்றை விடுகென்னப்

பூவாலர் செயல் மேற்கொள் புலைத் தொழிலோன் அவர்தம்மேல்

கோபாதி சயமான கொலைக் களிற்றை விடச் சொன்னான்"

எனும் பெரியராணம் பாடல் கொண்டு அறியலாம். எனவே அப்பர் ஆரம்பத்தில் சேர்ந்தது காபாலிகப் பிரிவேயாகும் என்பதை உணரலாம். மேலும் இவரது காலத்தில் காஞ்சியை ஆண்ட மகேந்திரவர்மன் சமணம் சார்ந்திருந்தபோது தாம் இயற்றிய 'மத்திவிலாச பிரகடனம்' எனும் நாடகநூலில் இக்காபாலிகர்களையும், பௌத்தர்களையும் எள்ளி நகையாடினான் என்பதை நோக்கும் போது அப்பர் காபாலிகம் சார்ந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## முடிவுரை

தெய்வ வழிபாடு என்பது பண்டைக் காலந்தொட்டே இருந்து வருகிறது. அக்காலத்தில் எல்லாம் வல்ல பரம்பொருளைக் குறிக்க, 'இறை, கடவுள்' என்ற சொல்லையே பயன்படுத்தினர். இதனை தொல்காப்பியம், சங்கஇலக்கியங்கள் உணர்த்துகின்றன. சங்கப் பாடல்கள் குறிக்கும் கொற்றவை, முருகன், சிவன், மாயோன் போன்றோர் வடவர்களின் (ஆரியர்களின்) வருகையினால் ஏற்பட்ட வைதீக தாக்கத்திற்கு உட்பட்டு முருகன் சுப்பிரமணியனாகவும், சிவன் - உருத்திரனாகவும், கொற்றவை பார்வதியின் அம்சமாகவும், மாயோன் விஷ்ணுவாகவும் மாற்றம் பெற்றனர். சங்க இலங்கியங்களிலும், தொல்காப்பியத்திலும் 'சிவன்' எனும் பெயர் இடம் பெறவில்லை. ஆயினும் சிவனைக் குறிக்கும்

முக்கட்செல்வன், மணிமிடற்றோன் போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. இச்சைவ சமயம் - காபாலிகம், காளாமுகம், மாவிரதம், வாமம், பாசுபதம், வைரவம் எனப் பல உட்பிரிவுகள் கொண்டிருந்தன. சைவம் சமயம் அன்று முதல் இன்று வரையிலும் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. பிறப்பு, இறப்பு, பற்றற்ற நிலை, நிகரற்றத்தன்மை முதலான எண்குணங்களைப் பெற்ற சிவபெருமானுக்கு எனப் பலவகை ஆலயங்கள் தமிழகமெங்கும் நிறுவப்பட்டு வழிபாடு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே. இத்தெய்வத்தை முழுமுதல் கடவுளாக வணங்குகின்ற மக்களுக்குள் இருந்த பாசுபதம், காளாமுகம், மாவிரதி, காபாலிகம், சாக்தம் போன்ற உட்பிரிவுகள் குறைந்து சைவம் என்பது சிவபெருமானை வணங்கும் சமயம் என்பதான ஒரு நிலையே தற்போது உருவாகியிருக்கிறது. எல்லாம் கடந்த பரம்பாருளாய் விளங்கும் இத்தெய்வத்திற்கான வழிபாட்டு முறையும் வைதீக நெறிமுறைப்படி மாறி பரவாலாக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் புனித ஸ்தலமான காசியில் வாழும் ஒருசாரார் மட்டும் பண்டைய மாவிரதி, காபாலிகர் போன்று உடலெல்லாம் நீறு புசி சிவனை வணங்கும் மரபினை உடையவர்களாக வாழ்கிறார்கள். சைவம் என்றால் சிவன் என்றிருந்த நிலையில் தற்போது சிறு மாற்றம் உண்டாகியிருக்கிறது. சைவம் என்பது சிவனை மட்டுமல்ல முருகன், விநாயகன், பார்வதி போன்ற தெய்வங்களையும் வணங்கும் சமயமாக மக்கள் மத்தியில் இன்று பதிந்திருக்கிறது. எது எவ்வாறாயினும் நெற்றியில் நீறு பூசி பட்டைப் போடும் வழக்கம் உடையவர் அனைவருமே சைவ சமயத்தைவர்கள்தான் என்பதே இன்றைய நிலையாகும் என்பதை நாம் உணரத்தான் வேண்டும்.

## References


Avvai Duraisamy Pillai, (1957) Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Avvai Duraisamy Pillai, S. (1968) Purananuru, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Gurusamy M.R.P. (2009) Palanthamilagam, Meyyappan Pathippagam, Chennai, India

Perumal, A.K. (2014) Tamilar Kaliyum Panpadu, Paavai Publications, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License